1979 நவம்பர் 6]

வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

185. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகசாலைச் சட்டத்தின் விவர அட்டவணையில் சில பொருள்களைச் சேர்ப்பது தொடர்பான விதிகளைச் செய்வது குறித்து உணவுத் துறையின் 4-8-1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 206ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகாசாலைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1951) 27(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

186. தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு எடை, அளவுகள் (செயற் படுத்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் 16-6-1979 ஆம் தேதி யிடப் பெற்ற அரசாணை எண். 993ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடை அளவைகள் (செயற் படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1958) 43 (4)வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

41. பேரவை விதிகள் குழுவின் அறிக்கை 1967 மற்றும் பேரவை விதிகள் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற தமிழ் நாடு சட்டமன்றல பேரவை விதிகளின் தமிழாக்கம்.

42. தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவிறுன் 1978–79-ஆம் ஆண்டிற்கான அறிக்கை (பாகம் I, II, III) (தமிழ்).

43. 27-8-1969-ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க 31-3-1978-ஆம் தேதியன்று உள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப்பெற்றன.

1. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்.
2. திரு. எம். ஆர். கோவேந்தன்.